அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம்
தேசிய மட்டத்திலான ”அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2021”
திருக்குறள் மனனம், ஒப்பித்தல் போட்டி ☐ பிறந்த ஆண்டு 2008 (வளர்நிலை7)

தெரிவுப்போட்டி: வளாகத்தில் அன்னைத் தமிழ்முற்ற இறுதிப்போட்டி: 27.03.2021 28.03.2021

---

1. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது. (103)

*பயனை எதிர்பார்க்காது செய்த உதவியின் தன்மையை ஆராய்ந்து பார்த்தால், அதனால் விளையும் நன்மை கடலைவிடவும் பெரியதாம்.*

2. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (127)

*எதைக் காக்காவிட்டாலும் தீயவற்றைக் கூறாமல் தம் நாவைக் காக்க வேண்டும். இல்லையேல் தீய சொற்களினால் பழியுண்டாகி வாழ்நாளில் துன்புறுவர்.*

3. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். (306)

*சினம் என்று கூறப்படுகின்ற சேர்ந்தாரை அழிக்கும் நெருப்பானது, சினம் கொண்டவரை அழிப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், தெப்பமாக உதவும் உறவினரையும் அழித்து விடும்.*

4. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென். (301)

*தன் சினமானது பலிக்குமிடத்தில் அதனை எழாமல் தடுப்பவனே சினம் தடுப்பவன் ஆவான். பலிக்காத இடத்தில் சினம் வராமல் தடுத்தாலென்ன, தடுக்காது இருந்தாலென்ன?*

5. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான் ணுயர்வு.(135)

*பொறாமை உடையவனிடம் ஆக்கம் இருக்காது. இதுபோன்று ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் உயர்வு இருக்காது.*

6. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலார்
என்னுடைய ரேனு மிலர். (430)

*அறிவுடையாரிடம் வேறுறொன்றும் இல்லாவிட்டாலும் அவர்கள் எல்லாமே உடையவர்கள்தாம். அறிவில்லாதவர்களிடம் எல்லாமே நிறைந்திருந்தும் அவர்கள் ஒன்றும் உடையவர் அல்லர்.*

7. சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது. (647)

*தான் எண்ணியவற்றைப் பிறர்க்குப் பொருந்தும் முறையில் சொல்லுதலில் வல்லவனாய், சோர்வு இலானாய், அவைக்கு அஞ்சாதவனாய் இருப்பானாயின் அவனை மாறுபாடான கருத்துக்களுடன் வெல்வது என்பது மிகவும் அரிதாகும்.*

8. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (90)

அனிச்சம் பூவின் தன்மை மோந்தவுடன் வாடிவிடுவதுதான். இது போன்று முகம் மலராமல் விருந்தினரைப் பார்த்தாலே அவர்கள் வாடிவிடுவர். அவர்களின் முகம் மாறுபடும்.